மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் தகுந்த பதில் தருகிறேன்.

விளையாட்டுகளில் ஆற்றல் மிகுந்த சிறுவர், சிறுமியருக்கு தீவிர பயிற்சி அளிக்கும் திட்டம்

13—(* வினா எண் 9603) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளையாட்டுக்களில் ஆற்றல் மிகுந்த சிறுவர், சிறுமியரை விளையாட்டுப் போட்டிப் பந்தயங்கள் மூலம் தெரிந்து எடுத்து அவர்களுக்கு தீவிர பயிற்சி அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, ஆம்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழக விளையாட்டு வாரியம் மாணவர்களை ஊக்குவிக்க என்னென்ன திட்டங்களைத் தீட்டியிருக்கிறது என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மிக இளமையிலே சிறார்களைத் தேர்ந்தெடுத்தல் என்னும் திட்டத்தை (catch them very young) 5 வயதுக்கு உட்பட்ட நர்சரி சிறார்களுக்காக நடைமுறைப்படுத்தி வருகிறோம். அதுபோல இளைஞர்களைத் தேர்ந்தெடுத்தல் என்னும் திட்டத்தின்கீழ் 14 வயதுக்கு உட்பட்ட சிறார் சிறுமியர்களுக்கான திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறோம். ஊரக விளையாட்டுப் போட்டி (All India Rural Sports) என்கிற முறையில் 14 வயதுக்கு உட்பட்ட சிறார் சிறுமியர்களுக்காக அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கோடைக் கால பயிற்சி முகாம் என்கிற பெயரில் மாநில விளையாட்டுச் சங்கங்கள் 32-க்கு நிதியுதவி அளித்து அதன் மூலமாக சிறுவர் சிறுமியருக்கு தேசிய விளையாட்டு ஊக்கத் தொகை அளிக்கிறோம். பள்ளிகளுக்கு அதன்மூலம் ஊக்குவிப்பு அளிக்கிறோம். இப்படி நல்ல பல திட்டங்களை சிறுவர் சிறுமியருக்காக நடைமுறைப்படுத்தி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1987 நவம்பர் 10]

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, விளையாட்டுகளில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு அரசுத் துறைகளில் எந்தெந்த வகைகளில் வேலைவாய்ப்பு அளிக்கப் படுகிறது என்று அறிய விரும்புவதோடு கிரிக்கெட், டென்னிஸ், ஹாக்கி போன்ற விளையாட்டு வீரர்களுக்கு வெளிநாடு களிலுள்ள சிறந்த விளையாட்டு வீரர்களின் மூலமாக பயிற்சி கொடுக்க அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறைகளில் முதல் நிலையில் வெற்றி பெறுகின்றவர்களுக்கு வேலைவாய்ப்பிலே முன்னுரிமை வழங்க வேண்டுமென்று அரசு ஆணை சென்ற ஆண்டு வெளியிடப்பட் டிருக்கிறது. அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

பயிற்சியைப் பொறுத்தவரையில் இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற சிறந்த வல்லுநர்களில் பலரைக்கொண்டு விளையாட்டு வாரியத்தால் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 10-40)

திரு. சைதை சா. துரைசாமி: தலைவரவர்களே, தமிழ்நாடு தேசிய அளவில் விளையாட்டுத் துறையில் எந்த எந்தப் பிரிவுகளில் முன்னணியில் இருக்கிறது? விளையாட்டு வாரியம் பயிற்சி அளிக்கும் பணியினை மேற்கொண்ட பிறகு எந்தெந்த விளையாட்டுகளில் முதல் இடத்தைத் தமிழ்நாடு பிடித்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, 'ஃபுட் பால், செஸ், ஹாக்கி' போன்ற விளையாட்டுகளில் தமிழ்நாடு தற்போது தென் மாநிலங்களில் முன்னணியில் இருக்கிறது.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, தமிழ்நாட்டு விளையாட்டுக் கலைஞர்கள் அழிந்துவிடாமல் அவர்களைப் பாதுகாக்கின்ற வகையிலேயும் அதனை அகிலத்திற்கு எடுத்துச் சொல்லுகின்ற வகையிலேயும் மாணவர்கள் மத்தியில் இந்த

[1987 நவம்பர் 10

விளையாட்டுப் போட்டிகளை மாநில அளவில் ஆண்டுதோறும் அரசாங்கமே நடத்துவதாக இருந்தால் சிறப்பாக இருக்கும். அந்த வகையில் நடவடிக்கை எடுத்து,

'ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா'

என்ற பாரதியின் பாடலை செயல்படுத்தக்கூடிய வகையிலே ஒவ்வொருவரையும், போர்ப்படை தளபதியாக உருவாக்கக்கூடிய வகையிலே நடவடிக்கை எடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, அதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

நசரத்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்

14—(* வினா எண் 12848) திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பூந்தமல்லி தொகுதி, நசரத்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, இப்பள்ளிக்கு கட்டடம் கட்ட தேவையான நிலம் பெற நடவடிக்கை பள்ளிக் கல்வி இயக்குநரால் மேற்கொள்ளப் பட்டுள்ளது. தேவையான நிலம் கிடைத்த பின்னர் நிதிநிலைமைக்கேற்ப இப்பள்ளிக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க பரிசீலிக்கப்படும்.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா: தலைவரவர்களே, இந்தப் பள்ளிக்குத் தேவையான 5 ஏக்கர் நிலம் பரிந்துரை செய்யப்பட்டு அரசுக்கு வந்திருக்கிறது. அதில் 2.5 ஏக்கர் அனாதீன புறம் போக்கு நிலம்; 2.5 ஏக்கர் குட்டை புறம்போக்கு நிலம். குட்டை புறம்போக்கு நிலத்தைக் கொடுக்க அரசு ஆணை கட்டுப்படுத்து கிறது என்று சொல்லப்படுகிறது. இந்த அரசு ஆணைக்கு விதிவிலக்கு அளித்து 5 ஏக்கர் நிலத்தையும் பெற்றுத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?